




ஓலை 90| ஓசை 213|அக்டோபர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை**

## பொருள்

**தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்!

## பா வகை: வெண்கலிப்பா

எத்தனையோ பலகோடி இருந்தாலும் பயனில்லை.
அத்தனையும் முயன்றெண்ணி அதையெழுதும் கணக்கியலும்
கற்காத முடவனிடம் கனிந்திருந்தும் பயனில்லை.
விற்பனைக்கு வருமளவு விழைந்துபொருள் பதுக்கினாலும்
எண்ணுந்தான் இணைந்தமொழி எழுத்துந்தான் அனைவருமே
கண்ணென்றே உணராமல் கருப்பொருளே அறியாரே!
வானவில்லும் அதுவண்ணம் வகையாகத் தொலைத்தாலும்
வானவில்லே எனப்புகன்றால் ஏழுவண்ணம் கணக்காகும்;
இதைகற்கார் எதுலிருந்தும் இயலாத முடவந்தான்.
எதையெல்லாம் பனிமலையே எனவெண்ணி மலைக்காமல்
அறிவினையே வளர்க்கின்ற அறத்தினையும் மதிக்கின்ற
அறிவொளியாம் அருங்கல்வி அடையாமல் எழுத்தெண்கள்
அறியாதார் இருந்தென்ன அருமுயிரை வளர்த்தென்ன?
வறியோரே எனவுணர்ந்து வளர்கல்வி பயிலவேண்டும்;
எண்ணத்தை இயம்பிடவும் இனிதாக இயங்கிடவும்
எண்ணெழுத்தே பயிலவேண்டும்; எதுவரினும் உயர்ந்திடுவோம்.
கல்மண்ணும் பயின்றதுபோல் கனிந்தேதான் வளர்ந்துநிற்கும்.
புல்லுந்தான் அருங்கல்வி பொலிவுடனே அதுபெருமே!
ஆறறிவு இருந்தாலும் அடிமாடாய்க் கிடக்கலாமா?
ஆறதுவும் எழுத்தெண்ணில் அடங்கிடுமே அறிந்திடுவோம்.
மண்ணிற்கு அழகேதான் மனம் நிறைந்த பெருங்கல்வி;
கண்ணுக்குள் குடியமர்த்திக் கணக்கியலும் அறிவோமே!
பேரறிவு எழுத்தெண்கள் பெருஞ்செல்வம் களவாடக்
காரணமும் இல்லையென காண்.







**இலக்கணக் குறிப்பு:**

நான்கடி முதல் எத்தனை அடி வரையிலும் இருக்கும். இரண்டடிக்கோர் எதுகை பெற்று வரும். முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். அடி தோறும் நான்கு காய்ச்சீர்களாக வரும் பாட்டு முடியும் போது வெண்பாவைப் போல் வெண்டளை போல் அமைந்து மூன்று சீர் வந்து, மூன்றாம் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும். நான்கு அடிகளென்றால் நான்காமடி வெண்பா ஈற்றடி போல் ஒவ்வொரு பாட்டிலும் வருதல் வேண்டும். இணைத்து எழுதுவதாக இருந்தால் ஈற்றடியை மட்டும் வெண்பா ஈற்றடியாக அமைத்தல் வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்

பா வகை: அறுசீர் விருத்தப்பா
வாய்பாடு : விளம் + விளம் + விளம்
விளம் + விளம் + விளம்

வாழ்ந்திட நெறிதனைச் சுட்டியே
வாழ்க்கையைத் திறம்பட நடத்துமே.

தாழ்நிலை அகன்றிட நாளுமே
தழற்சியைப் போக்கிட உதவுமே.

ஆழ்ச்சியில் மூழ்கியே நித்தமும்
ஆழ்தலை நீக்கியே உயர்த்துமே.

காழ்கொள அறவழி தன்னையே
காழ்ப்புடன் பற்றிடச் செய்யுமே.




கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

## பா வகை: பாவகை: ஒத்தாழிசைக் கலிப்பா

**தரவு:**

அகிம்சைவழி கண்டெடுத்த அன்னலெனும் காந்திமகான்
அகிலத்தின் விடுதலையில் அவதரித்த நேசமகான்
நெகிழ்ச்சிதரும் சுதந்திரத்தில் நிமிரவைத்த தேசமகன்
முகிலோடு போராடும் மூத்தறிஞர் இவர்தானே.

**தாழிசை:**

காடுமேடும் கண்டுணர்ந்த கலைமகனார் காந்திதானே
நாடுதோறும் நன்கறிந்த நல்லறிஞர் வித்தகரே
கேடுதரும் வினைகளையும் கிழித்தெறிந்த பண்டிதரே.

வரிவிதிப்பை எதிர்த்துநின்ற வறியவரின் குணமகனே
எரிமலையாய் வெகுண்டெழுந்த இந்தியரின் புதல்மகனே
பிரிவினையின் நானிலத்தை பிரசவத்தால் இணைத்தவரே.

மனிதநேயம் சிறக்கவைக்க மரகதமாய் பிறப்பெடுத்தாய்
இனிமையுடன் நற்செயலை இன்பமுற நட்டுவைத்தாய்
பனிமலையின் சரிவுகளில் பாரதத்தின் அருள்முகனே.

**தனிச்சொல்:**
மகாத்மா

**சுரிதகம்:**

காந்தி என்றால் காந்தம் ஈர்க்கும்
மாந்தர் கூட்டம் மண்ணில் பூக்கும்
வேந்தர் காண வெற்றி மைந்தன்
பூந்தளிர் நிலத்தின் பூமக குகனே.



கவிஞர் ஈ. தவணிதன், பல்லடம்

# மணிமேகலை (இருபத்தி ஒன்பது)

28. கச்சி மாநகர் புக்க காதை (பாகம் ஒன்று)

மாதவி, சுதமதி, அறவண அடிகளைக் காண
ஆதலால் வஞ்சிமா நகர் வந்தாள் மணிமேகலை
சாதகமாக எப்பொழுதும் போர் வீரர்கள்
காதில் முரசொலி கேட்டபடி இருந்தன.

நறுமண கலவையில் நீராடும் மகளிர்
மறுபுறம் பொய்கையில் நீராடும் மக்கள்
அறுசுவைக் கூடங்களில் ஓடிவரும் நீர்
சிறு கால்வாய்களாக அகழியில் கலக்கும்

மதில் சூழ்ந்த நகரினுள் புகுந்தாள்
அதில் பல் பொருள் அங்காடிகள்
வேத்தியல் பொதுவியல் ஆடும் மகளிர்
வீதிகள் ஆபரணக் கடைகள் பார்த்தாள்

தவமுனிவர் உருவில் வந்தாள் மணிமேகலை
தவத்தில் சிறந்த துறவிகளை வணங்கினாள்
பாவங்கள் நீக்கும் பௌத்த பள்ளிகள்
மாசாத்துவான் பாதம் தொட்டு தொழுதாள்
கச்சி மாநகர் வந்தது வரை
தன் வரலாறு கூறினாள் மேகலை




(மாசாத்துவான் பதில் உரை )
தூயவளைக் கண்டது நல்வினைப் பயனே
மாயமான தீவினையால் மதுரை அழிந்தது
காயம் தெளிய தவம் புரியலானேன்
தாயாக நிற்கும் பெண்ணே நீவாழி "

இலங்கா தீவத்துச் சமனொளி என்னும்
சிலம்பினை அடைந்து திரும்பும் சாரணர்கள்
நலமாக இச்சோலை வந்து சேர்ந்தனர்
பலமான சேரன் அவர்களை வணங்கினான்
( சிலம்பின : மலை )
தர்மசாரணர்கள் அரசனுக்கு அருளுரை கூறினர்
"அரிய நால்வகை வாய்மை துணைகொண்டு
புரிதலோடு புத்தன் பாதையில் செல்வீராக
வருவதெல்லாம் நன்மைக்கே என்று உணர்க "

(கோவலனின் எதிர்காலம் கூறினான்)
இனிமையாகக் கேளாய் நன்னெறி மாதே
தீவினைப் பயன் கோவலன் கொலையுண்டான்
நல்வினைப் பயன் மனைவியோடு தெய்வமானான்
செய்வினைப் பயன் மீண்டும் பிறந்துழளுவான்

புத்தனின் போதிமர அருளுரைகள் கேட்பான்
அத்தனையும் கேட்டவன் வீடுபேறு அடைவான்
இத்தருணம் அவன் மகள் தவசியானாய்
இச்சகத்தில் உன்புகழ் நிலைத்து நிற்கும்

தொடரும் ...

கவிசூர் ந.திருக்காமு

# பரந்தாமா பரந்தாமா பாதைகாட்டு பரந்தாமா

பரந்தாமா பரந்தாமா பாதையொன்று காட்டவேண்டும்,
பாவியேன் சிக்கல்கள் விரைவிலவிழவே பரந்தாமா!

பாதகமென்ன செய்தேன் பாவியேன் பரந்தாமா;
படுத்தி எடுக்கின்றாய் என்னையேன் பரந்தாமா;
பம்பரமாய்ச் சுற்றிவர நீயெனக்கரு ளாவிட்டாலும்
போகும்பாதை யிலேநிற்காது நடையிடவருள்க பரந்தாமா!

புரட்டாசி மாதமென்றாலே பரந்தாமா நானுமந்தன்
புகழ்ப்பாட ஆலயம் வந்ததுண்டு பரந்தாமா;
புத்தியிருக்கு பரந்தமாவின்றும் உந்தன் புகழ்பாட;
பித்தான மனமதற்கு ஒத்துலைக்கலையே பரந்தாமா!

பெற்றபிள்ளை காட்டுகின்ற மௌனம் பேதையெந்தன்
பணிக்கே தடைகல்லாய் ஆனதெப்படி பரந்தமா?
பற்றின்றிவாழவே தாமரையிலை தண்ணீரரைப் பரந்தமா
பயில்வோருக்கு உவமைசொன்னவன் பரிதவிப்பதேன் பரந்தாமா?

படகது பயணிக்கும்போது பரந்தாமா, நீரது
படகிற்குள் செல்லலாகதென அறியவைத்த பரந்தாமா,
படகாமெந்தன் மனத்திற்குள் பாசமாம் நீர்வந்து
புகுந்தது என்ன நியாயம் பரந்தாமா
பிரகலாதனைக் காக்கவந்த பரந்தாமா, நரசிம்மா,
பிள்ளையுனக்குப் பிரகலாதன் மட்டுந்தான நரசிம்மா?
பெருமாட்டி லட்சுமி மணாளா நரசிம்மா
பாவியேனுனக்கு பிள்ளையல்லவோ பகர்வாயே நரசிம்மா!
பிள்ளையுனக்கு நான்மட்டுமல்லவே லெட்சுமி நரசிம்மாயெந்தன்
பிள்ளையுனுக்கும் பிள்ளைதானே சொல்லுகவே நரசிம்மா!



பிள்ளையவனும் பிரியமுடன் கலகலவென்றே சிறுபிள்ளையில்
பேசியதைப் போலவேபேசிட அருள்கவே நரசிம்மா!
பிள்ளையவன் மனத்திலுள்ள பிரச்சினைகள் தீரவருள்கவே!;
பிள்ளையவனும் பிடித்தபணி கிடைத்து நற்பணியு மாற்றி
பெரும்பேறுபெற்று மகிழ்வுடனே மனையாளுடன் பிள்ளைபெற்று
புவிதன்னில் வாழ்ந்திடவே அருள்கவவனக்கு நரசிம்மா!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# விழையவில்லை

புயல்கற்று
பூகம்பம்
வெள்ளத்தையும்
எதிர்க்கொள்ளும்
சிமெண்ட் கம்பிகளில்
கட்டி முடிக்கப்பட்ட
அடுக்குமாடி வீட்டில்



தாத்தா பாட்டியின்
புகைப்படத்தையோ
கடவுளின் படத்தையோ.
சுவற்றில் ஆணியடித்து
மாட்டி வைத்து
மலர்மாலை சூட்டி
அழகு பார்க்க
விழையவில்லை
மனம்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# நேசப் பொழுதுகள்

அந்தந்த தருணங்களை
அந்தந்த சம்பவங்களை
அந்தந்த விடயங்களை
ஏந்திக்கொண்ட பேரானந்தத்தின் சாயலோடு
உணர்வுகளின் பெருவண்ணத்தோடு
சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும்,

சில புகைப்படங்கள்
மிகவும் அழகானவை.



காணுகின்ற
ஒவ்வொரு தடவையும்
கால இயந்திரம்
ஏறி விடுகிறது மனது.
மீண்டுமந்த நினைவைத் தொட்டது
தாலாட்டுகையில்.
ஆன்மா கண்விழித்து
களித்துக் கொண்டாடுகிறது
அந்நேசப்பொழுதுகளை!

கவிசூர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# நாடு

## அதிகாரம் : 74

குறைவிலா விளைச்சலும்
நிறைந்த அறிவுடையோரும்.
கேடில்லா செல்வமும்
சேர்ந்திருப்பதே நாடாம்.

பெருஞ்செல்வ முடையதாயும்
விரும்பத்தக்க நிலமாயும்.
கேடில்லாதாயும் மிகுவிளைச்சலுடையதாயும்
உள்ளதாமே நல்நாடாம்.




அயல்நாட்டோர் குடியேறினும்
அசராது அதைத்தாங்கி.
அரசனுக்கான திறைப்பொருளை
தரவல்லதுமானதே நல்நாடாம்.

பெரும்பசியும் கொடுநோயும்
வெளிநின்றெழும் பகையழிவும்.
அருகண்டவிடாது இனிதாய்
நடைபெறுவதே நல்நாடாம்.

பிரிந்தியங்கும் கூட்டங்களும்
உள்ளிருந்தே அழிக்கும்பகையும்.
வேந்தைவருத்தும் வெறிகொண்ட
குறுவேந்துமில்லாநாடே நல்நாடாம்.

பகைஞனால் கெடுக்கப்படாததாயும்
இயற்கையால் கேடுவரினும்.
வளங்குன்றாததாயும் திகழ்நாடே
நாடுகளுள் நல்நாடாம்.

ஊற்றும் மழைநீருமாவளம்
தக்கதாயமைந்த மலையுமதன்.
ஆற்றுநீர்வளமும் வலியரணுமே
நல்நாட்டின் உறுப்புகளாம்.

நோயில்லாகுடிகளுடன் செல்வமும்
விளைப்பெருக்கும் கவின்கலைகளும்.
நற்காவலுமாம் இவ்வைந்துமே
நல்நாட்டிற்கு அழகாம்.

முயன்று வருந்தித்தேடாதமைந்த
வளமுடைநாடே நல்நாடு.
தேடிவளஞ்சேர்க்கும் நாடு
நல்நாடு ஆகாதாம்.

மேற்கூறியன வெல்லாம்
சிறப்பாய் அமையப்பெறினும்.
பாராளுமரசன் பொருத்தமிலையெனின்
அந்நாடு வீண்நாடாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# வேல்விழிப் பார்வை விழைவினைக் கூறுதடி

அன்பே ஆருயிரே
அன்னத்தின் மென்மையே
கண்ணே மணியே
கற்கண்டின் சுவையே

கருவிழிகளால் கவர்ந்தவளே
காதலை உணர்த்தியவளே
குறுநகை சிந்தியே
சிந்தையில் நிறைந்தவளே

கோலமயிலே கோமேதகமே
துள்ளியோடும் மானே
இதழமுதத் தேனே
பருகினேன் நானே

வாழ்வில் வரமானவளே
வசந்தத்தின் வரவானவளே
சில்வண்டாய் மனதினில்
ரீங்காரம் இசைப்பவளே

சிற்றிடை காரிகையே
முத்திரை பதித்தவளே
கரங்கள் கோர்த்து
காவியம் படைத்தவளே

மெல்லியதாய் அணைத்து
மோகத்தை வளர்த்தாயே
வேல்விழிப் பார்வை
விழைவினைக் கூறுதடி




என்னுள் நுழைந்து
ஏகாந்தம் போக்கினாயே
நீங்காத நினைவுகளில்
உந்தன் ஞாபகங்களே

உவகை பூத்திடும்
உந்தன் அதரங்களே
மேனியும் சிலிர்த்திடும்
என்னவள் வனப்பினிலே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# திலீபன்

தாயகம் தாகம் தீர்த்திட
தன்னுடல் வருத்தினான்.
தழல் காற்றை நுகர்ந்து
தண்ணீர் தீண்ட மறுத்தான்.
தமிழீழ விசும்பின் எல்லை மீட்க
மெய்யை தீயாக ஈந்தான் திலீபன்.
வடக்கிருத்தல் வழமை மாற்றியவன்
வயவன் நெஞ்சுரம் கண்டு
வங்கம் தோற்று நின்றது.
விடுதலை சுடர் திலீபன்.




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# மாறாதோ

அந்தி மாலை பூச்செண்டு
எல்லாம் என்னைக் கேள்வி
எழுப்புவதைப்போல
தோன்றும்.



நான் என்ன சொல்ல
மௌனித்து கிடப்பதைத்
தவிர வேறென்ன
செய்திடட்டும்.

இயற்கை காதலிக்கு
காதலன் நீயும்.
அந்த பச்சை பசேல்
வயலில் சின்னதாய்
ஒரு குடிலில்

வேறென்ன பெரிதாக
வேண்டும் ஏழ்மையில்
சந்தோசமில்லையென்றா?
நீயும் ஏற்க மறுத்து
கிடக்கிறாய் அன்பே!

தொய்ந்து போகும்
மனதை நிவர்த்தி
செய்வதெப்படி
தொலைகிறேன் தினம்.

இப்படித்தான் தினமும்
நானும் என் செல்ல
பூனையும் உன்
வரவை எதிர்ப்பார்த்து
காத்திருப்பதும் நீ வராது
போவதும் ஏமாறி தொலைவதுமே
இப்போதேனும் மாறிவிடாதோ?
என தான் நான்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# மண் பறித்து உண்ணேல்

மண் பொன்
பெண் ஆசை
மலையை விட
அகலப் பெரிதே.



வாழ்வாதாரங்கள்
அடிப்படையே
வந்து விட்டோம்
வாழக் கற்போம்
வசந்த முல்லைகளாக.

வரப்புச் சண்டையில்
வயலை விற்று
வக்கீலுக்கு கொடுத்து
இழந்தவர்கள் ஆயிரம்.

மாற்றான் மனைவிக்கும்
மற்றவன்
மண்ணுக்கும்
எப்போதுமே
பேராசைகளை
அறுத்து எறி.

இருக்கும் பூமியில்
இன்புற்றே களி.
இயல்பான விவசாயத்தில்
இரவையும் பகலாக்கிடு.

உள்ளதைக் கொண்டு
உவந்து வாழ்வதே
வள்ளுவன் வகுத்துத்
தந்த நெறி.

அன்பில் உயர்ந்தே
பண்பில் வளர்ந்தே
நானிலம் போற்றிடும்
மன்னனாய் திகழ்ந்திடேன்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# மொட்டை மரம்

கனி பறிக்கவென கல்வீசி
பிணியினை உண்டாக்கியே
கிளைகளை காயப்படுத்தியோரே!
கூடாரம் போடவும்
கூட்டம் போடவும்
கோடரி கொண்டு
குறுக்கில் வெட்டியோரே!
வேடிக்கையோ வேசமோ
வாழ்வோ வசதியோ
விளம்பரமென
ஆணியடித்து
அடிவயிற்றைத் துளைத்தோரே!
தனக்கென உருவாக்கிக் கொண்டு
தன்னையே நிலைநிறுத்த
அமைத்திடும் பாதைக்கு
இடையூறென
அடிமண்ணின் வேரினை
அடியோடு வெட்டியோரே!
நீளும் சாலைக்கென
நிழலற்ற பாலையென
எரித்திடும் அனலையே
வீசி நிற்கும் வெயிலின்
வன்கொடுமையை
விதைத்துச் செல்வோரே!
தேடினாலும்
கிடைத்திடுமெனத் தெறிவதில்லை
மொட்டை மரத்தின் நிழலையும்
வெட்டிய குழிக்குள்
மென்காற்றையும்.



கவிஞர் இளையவன் சிவா

# எனக்குள் இருக்கும் மிருகம்

எனக்குள் இருக்கும் மிருகம்
நினைத்து நானே அஞ்சுகிறேன்.
ஒன்றல்ல இரண்டல்ல
இல்லை; ஒன்றுதான்
பலவாறாக விரிகிறது.




பொறாமை என்னும்
பொல்லா மிருகம் அது
பேராசை ஆகிறது
பொல்லாங்கு பேசுகிறது.


ஒன்று இருக்க
ஒன்று உரைக்கிறது
தந்திரம் பயில்கிறது
அடுத்துக் கெடுக்கிறது


வஞ்சனைகள் பேசி
ஏமாற்றிப் பிழைக்கிறது
தாறுமாறாக நடந்து
உறவை முறிக்கிறது


நேர்மைக்கு விலைபேசி
கேண்மையை கெடுக்கிறது
பண்புக்கு பரியாமல்
பித்தலாட்டம் செய்கிறது

பார்க்க நான் மான்
பழக நான் பசு
அழுக்காறு என்னை விஞ்சும்
வரைதான் நான் சிசு


பேயாட்டம் ஆடும் அது
இரையை விடாது
துரத்திக் கொல்லும் வரை
கண் மூடாது

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# பயணம்

குகையில் இருந்து ஆற்றோரம்
பயணப்பட்ட மனிதன்
நாகரீக வாழ்வை கண்டெடுத்தான்!
சக்கரம் வந்தது வாழ்க்கையும்
ஏற்றம் கண்டது!
வேட்டையாடிய மனிதன் விவசாயம்
செய்யக் கற்றான்!
இருப்பிடமும் காலநிலைக்கேற்ப
மாற்றம் கண்டது!
விஞ்ஞான கண்டுபிடிப்பு
விவேகத்தை அளித்து
தைரியம் சொன்னது!
அனுபவம் பல பாடம் கற்பித்தது!
அவன் முன்னேறும்
வழியைத் தேடித்தேடி
பயணம் செய்கிறான்!
இன்னும் அவன் பயணம் நிற்கவில்லை!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# வாடகை தாய்

பிரித்து சென்றனர்
உன்னை
பிறந்தவுடன்
வாழ்நாள் முழுவதும்
என்னை நீ
காணவில்லை என்றாலும்
உன் ஒவ்வொரு
செய்கைகளிலும்
மறைந்திருப்பேன் நான்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# வேடம்

என்னை
நண்பரென்று நம்புமளவு
நான் நல்லவனில்லை
நீநம்பி விதைத்தால்
முளைப்பதற்கு நான்
விளைநிலமில்லை.
நான்காட்டும் நாடகத்திற்கு
விலைமதிப்பில்லை,
நான்போடும் வேடத்திற்கு
விருதுகளில்லை.




கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

தொலைந்துபோனது இரட்டைப்புறா
மேகங்கள் கொண்டு தேடுகிறது
வானம்

***

தொலைந்துபோனது இரட்டைப்புறா
எட்டுத்திக்கும் தேடுகிறது
மேகம்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# இதயத்தை இதமாக்கு

இதயத்தின் ஓசை நாளும் கேட்க
இரு உள்ளமும் இணைந்து நிற்க
இனிமையான தருணத்தை தேடி மகிழ
இன்சொல்லில் அவளது மனதை திருட
இனிமையான தென்றல் காற்று வீச
இன்பம் பொங்க முகம் மலர
இல்லறம் நல்லறமாக மலர்ந்து இன்று
இல்லம் சிறக்க அவளும் நானும்
இணை பிரியா ஜோடிகளாய் வந்து
இதயத்தை இதமாக்கி மகிழ்கிறோம் என்றுமே.



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# பறை

நான் சிறையிட்ட பறையே,
உன்னை வியர்வை கொட்ட அடித்தேன்
ஒருநாள் உழைப்பு நீயேயென்று.
கச்சேரிக்கு சென்றேன்
காய்ச்சிப்போன கம்பினால்
கண்களை மூடி அடித்தேன்
கால் வயிறு நிரம்புமென்று.
அம்பாளின் கோவிலில்
ஆவேசத்துடன் அடித்தேன்
அரைவயிறு நிரம்புமென்று.
இறந்தவரின் அருகே அடித்தேன்,
இழிவுச்சொல் கேட்டும்
இமைகளை மூடி அடித்தேன்,
தான் இறந்து போக்கும்வரை
பறையடிக்க வேண்டும்மென்று.



கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

குறளின் கருப்பு வெள்ளை வரிகளில்
வாழ்க்கை வானவில் வண்ணங்களாய்

குறளை அறிந்து கொண்டால் வாழ்க்கை
கடைசி வரை குன்றிலிட்ட விளக்காய்

வள்ளுவம் கண்டவர் வறுமையிலும்
செழுமையாக


எழுத்தாணியில் பிறந்த குறள் இன்று
இணையத்திலும் ஆரோக்கியமாய்

அதிகாரங்கள் பல கண்டாலும் அகங்காரம்
இல்லாத அன்பு நூல்

வாழ்வின் வழி காட்டும் அறிவார்ந்த
இரண்டடி இதிகாசம்

அறிவு வெளிச்சம் தரும் அழகான
அகல் விளக்காய் திருக்குறள்

தமிழின் தாலாட்டில் குறளின்
குரல்கள் உலகெங்கும் உற்சாகமாய்




கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

ஆண்டவன் அளித்த அகல் விளக்குகள்
அந்தமும் ஆதியுமாய் கரை விளக்குகள்
வாழ்வின் கடலில் திசைகாட்டி கருத்தாக்கள்
கண்ணெதிரே கண்டவுடன் கலங்கமில்லாது
பணிவடங்கும் போற்றதக்க பாத்திரங்கள்
அகழாத அத்தனையும் அடிநுனிவரை
அடிப்படை விளக்கங்கள்
பெற்று தந்த பிரபலங்கள்
கொடையளிக்க வந்த தருணங்கள்
தாம் உணர்ந்தோம் தட்டிகளித்து அகழ,
ஒருதுளி சினை இல்லா தனித்துவங்கள்
எம் ஆசிரிய பெருமக்கள்!



கவிஞர் வியாத்தன் ச. லக்ஷஹரன்

# பின்னலாடை நகரம்

அங்காடிகள் அணிவகுத்து
விதவிதமாய் கடைவிரிக்க
அலைஅலையாய் மக்கள் கூட்டம்
அளவில்லாமல் பெருகி வழியும்

சிவப்பு மஞ்சள் பச்சையென
சிங்காரமாய் சமிக்ஞை செய்து
நீண்டிருக்கும் சாலைதனில்
முண்டிச்செல்ல துடிக்கின்ற
அலுவலக வாகனங்கள்

படிகள் நிரம்பிய பேருந்துகள்
பேரம் பேசும் மூவுருளிகள்
சிறிதாய் பெரிதாய் குறுகியதாய்
கூறு கட்டிய காய்கறி குவியல்கள்




கிடைத்த இடங்களில் அடங்கிக் கொள்ளும்
ஆட்கள் தேவை,வீடு வாடகைக்கு
விளம்பர பதாகைகள்

தம் பசி போக்க
பிறரின் பசி தீர்க்கும்
சிற்றுண்டி கடைகள்

உணவு இடைவேளையைக்
கடன் வாங்கிக் கொள்ளும்
உறவுகளின் அழைப்புகள்

வசதியான குடித்தன வீடோ
நெருக்கடியான வரிசை வீடோ
இறுதியில்
நான்கு சுவர்கள் இருந்தால் போதுமானது
கூடடையும் பறவைகளாய் இரவில் வீடடைவதற்கு

புரியாத மொழிகள்
அறியாத முகங்கள் மத்தியில்
அடைக்கலம் நாடி வரும் அயலக குடும்பங்கள்

பணிச்சுமையைக் குறைத்துச் செல்லும்
பண்டிகை கால விடுமுறையின் எதிர்பார்ப்புகள்

நேரத்தைத் துரத்தி ஓடிக் கொண்டிருக்கும்
அனேகம் பேரின் வாழ்வு
இழையோடிக் கொண்டிருக்கிறது
தையல் இயந்திரங்கள்
தின்று செரிக்கும்
பின்னலாடைகளின் பின்னால்

கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# அடகுக் கடை அழைப்பு

கோடை மழை வந்ததுமே
விதைப்பு நெல்லிற்கு.
அடம்பிடிக்கின்றது
அம்மாவின் தாலி கொடி.

அடகுக் கடையில்
மூன்றாம் ஆண்டாய்
அடியெடுத்து வைத்திடவே.




கவிஞர் கு. ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி, மதுரை

# பேருந்து

பேருந்தில் உன்னைக் கண்ட நாள் முதல்
உன்னைப் பற்றிய சிந்தனைகள்
எனக்குள் உதிர்ந்து கொண்டிருக்கிறது
என் கண்களை தூங்கு விடாமல்
தொல்லை செய்கிறது
சாலையில் பேருந்து செல்லும் போதெல்லாம்
ஓடி வருவேன் பேருந்தினை பார்ப்பதற்கு அல்ல
பேருந்தில் இருக்கும் உன்னை பார்ப்பதற்கு
உன்னிடம் பேசு பேசு என என் மனம் துடிக்கிறது
உன் அழகான கண்களைக் கண்டால்
நான் மௌனமாகி விடுகிறேன்




கவிஞர் பா. அஜி பாலகிருஷ்ணன்

# அழியா புகழே அணிகலன்

இந்த பிரபஞ்சம் எனும் காலச்சக்கர வாழ்விலே
நாம் எல்லாம் *பயணிகளே*

வாழும் காலம் யாவுமே நன்மை பயக்கும் வழியிலே
பயணிக்கும் மனிதன்தான் *காலம் கடந்தும்* வாழ்வாரே.

உண்மை அன்பு பாசமே உடன் வாழும் மனிதனுக்கு அளித்து
வாழும் மனம் படைத்த மனிதன் என்றும் *தெய்வமே*.

ஏற்ற தாழ்வு பார்க்காத இனிய குணம் படைத்திட்ட கூடி வாழும்
மனம் கொண்ட மனிதன் என்றும் *மகானே*.



*வரப்புக்காக வயலை விற்று* வழக்காடும் மனிதர்கள்
நிலையில்லா வாழ்விலே நீதி மறப்பது முறைதானோ?

பொன் பொருள் சொத்து என முறையற்ற வழியிலே
சேர்த்த செல்வம் யாவுமே *பாவ மூட்டையாய்*
பயனற்று போகுமே.

இனிய மனம், இரக்கருணம், மனித வாழ்வின் உண்மை குணம்
அறிந்து வாழும் மனிதனே காலம் கடந்தும் வாழ்வாரே.

உண்மை நேர்மை சத்தியமே வாழ்விலே லட்சியமாய் கொண்டு
*அறமாய்* வாழும் மனிதனுக்கு
"அழியாத புகழே அணிகலனாய்" திகழுமே.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# பண்போடு நட

பா வகை: ஆசிரிய அறுசீர் மண்டிலம்
(விளம் +மா +தேமா)

பண்பினை நாமும் ஏற்றே
பாரினில் வாழ்ந்தால் மேன்மை;
வண்ணமாய் வாழ்வை மாற்ற,
வாழ்வுமே இனிக்கும் உண்மை;
மண்ணிலே மாந்தர் பண்போ
மகுடமாய் வாழும் நாளும்;
பண்ணிலே பண்பைப் போற்ற,
பாவலர் புகழும் சேர்ப்பர்!



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# வெளிச்ச இரவுகள்

மடியாத சோம்பல்
முடக்கம் வருமே
விடியல் எப்போ
வினாக்கள் தருமே
பகலிலும் இருட்டாய்
பூத்திடாத வாழ்வு
அகலா வறுமை
அண்டியது தாழ்வு

இயன்றதை செய்ய
இசைவு கொண்டிடு
முயன்றிடும் முனைப்பில்
முயற்சியை தொடங்கிடு
விருப்பம் கொண்டே
வேலையை செய்திடு
திருப்பம் கொடுக்கும்
திறமையைக் காட்டிடு

எதிர்மறை சிந்தனை
எப்போதும் தவிர்த்திடு
நேர்மறை சிந்தனை
நிறைவாய் வைத்திடு
உழைப்பதை வேதமாய்
உள்ளத்தில் இருத்திடு
உழைப்பின் தொடர்ச்சி
உயர்வைப் பெற்றிடு

விடியா இரவுகளும்
விடியல் நாடும்
முடியாத இரவும்
முடிவைத் தேடும்
பளிச்சிடும் ஒளியும்
பூபாளம் பாடும்
வெளிச்சமாகும் இரவுகள்
வறுமையும் அகன்றோடும்

தன்னைத் தீய்த்திடும்
தியாக வடிவுடையாள்
தன்னுடல் சிதைத்து
தன்குடும்பம் காத்திடுவாள்
பகலிலும் இருட்டாய்
பாங்கில்லா வாழ்க்கை
அகலா வறுமையிலும்
அயராத நம்பிக்கை

புகலிடம் சேர்ந்தவள்
புதைகுழி வசமானாள்
இரவின் இருட்டில்
அவள் வெளிச்சமானாள்
வரவின் மிகுதி
வாடிடும் அனிச்சமானாள்
வெளிச்ச இரவுகளால்
வளமைக் கொண்டாள்



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# ஹைக்கூ கவிதைகள்

மகிழ்வாய் குழந்தைகள்
மழையில் நனைகிறது
வாழை இலை.

காய்ந்து கிடக்குது
பசுமை வயல்கள் எல்லாம்
வீட்டு மனைகள்.

காட்சிப் பிழை
கவனிக்க மறந்து விட்டான்
வாசலில் சிறுவன்.



பசுமையான காட்சி
பார்க்கப் பார்க்க மகிழ்ச்சி
தேயிலைத் தோட்டம்.

சிறுவர்களின் மனசு
மகிழ்ச்சியில் துள்ளி குதிக்கிறது
வலையில் மீன்கள்.

கவிஞர் கவி. செங்குட்டுவன், ஊத்தங்கரை

# எந்தன் வாழ்க்கை

என்னவென்று சொல்வது
எந்தன் வாழ்க்கை
எங்கிருந்து தொடங்கியதோ
எங்கே போய் முடிவடையுமோ

எச்சரிக்கை பல உண்டு
எஞ்சாமி துணையுண்டு
எடுத்துக்காட்டாக வாழ நினைத்தே
எஞ்சிய உடல் உழைப்பு மூலதனமாய்

எட்டா உயரம் செல்ல
எண்ணாமல் இஷ்டபட்டேன்
எண்ணமெல்லாம் வெறும் கனவாக
எண்ணியதோ வீணாக

எத்தனை வருட நினைவுகளும்
எத்தியே சென்றுவிட்டதே
எதிர்காலம் என்பதெல்லாம்
எதேச்சையாக வரவேண்டுமே

எதை எதையோ மனதில் சுமந்துகொண்டு
எதுவுமே நிலையில்லையே
எதற்காக அலைக்கழிப்பு
எதையுமே செய்ய தோன்றவில்லை

எந்த ஒரு துயரத்திற்கும்
எப்படியும் ஒரு முடிவிருக்கும்
எப்படி இருக்கு புரியலையே
எம்மை படைத்த இறை ஒருவனுக்கே

எய்தும் துன்பம் காரணி அறிந்திருப்பான்
எப்போதுமே நமக்கு தெரியபோவதில்லை
எரிந்து சாம்பலாகும் வரை
எல்லாம் பழகவேண்டுமே



எல்லைக்கோடில்லா விதி வசமே
எவ்வளவு நல்லவரானாலும்
எழிலான வாழ்வதிலே
எள்ளளவாவது குறை இருந்திடுமே

என்னவென்று புரிவதற்குள்
எல்லாம் முடிந்து காரியம் நடந்திடுமே!


கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# ஏகாந்த வேளை

அலை பூசும்
மணலோவிய பாதம்

அவள் பேசும் பேச்சில்
அலை சூடும் மௌனம்

ஏதோ நினைவின்
ஏகாந்தம் அவள்!



கவிசூர் ஜெயப்பிரபா

# கவிதைத் துளிகள்

பூக்களின்
வரம்
விழித்தவுடன்
வானம்
பார்க்கின்றன

உடைந்த
கடிகார உண்டியலில்
அவ்வப்போது
நேரங்கள்
சிதறுகின்றன



ஒற்றை மழைத்துளி
உருண்டோடி
வேர் நனைக்கிறது
வரிசையில்
மழைத்துளிகள்

களைத்துப் போன
மரவெட்டி
ஓய்வெடுக்கிறான்
மற்றொரு
மர நிழலில்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# காந்தி அண்ணல்

வானத்திலேயே தோன்றிய நட்சத்திர கூட்டத்திலேயே
ஒரு சில நட்சத்திரமாம் அதிக பேரொளியோடு ஒளிரும்.
அவ்வகை பேரொளி நட்சத்திரம் நம் காந்தி மகான்.

அவர் பிறந்த நன்னாள் அக்டோபர் இரண்டிலேயே
வன்முறை எதிர்ப்பு தினமாகவும்,
அகிம்சை தினமாகவும் கொண்டாடுகிறோம்.



எளிமைக்கும் காந்தி.
உண்மைக்கும் காந்தி.
நேர்மைக்கும் காந்தி.
கதர் ஆடைக்கும் காந்தி.
சத்திய சோதனைக்கும் காந்தி.
அவமானத்தையும் துச்சம் ஆக்கிய காந்தி.

ஒரு மாமனிதன் இறந்தால் மட்டுமே
சிலை வைக்கும் காலத்தில்
தாகூர் அவர்களால் மகாத்மா என்று
அழைக்கப்பட்ட காந்திக்கு
லண்டன் மாநகரில் சிலை வைக்கப்பட்டது.

நம் நாட்டில் விளைந்த உப்பிற்கு வரிப்போட்ட
வெள்ளையனை எதிர்த்து
உப்பு சத்யா கிரகத்தை நடத்தி வெற்றி கண்டவர்.
பெண்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.
வெள்ளையனே வெளியேறு என்று முழக்கமிட்டவர்.

நாட்டின் விடுதலைக்காக சிறை சென்றவர்.
" சத்திய சோதனை" என்ற புத்தகத்தை எழுதியவர்.
இந்தியாவின் தந்தை என்று போற்றப்படுபவர்.
அன்பு வழியிலும், அகிம்சை வழியிலும் போற்றி நின்றவர்
உலகம் உள்ளளவும் போற்றும் உத்தமர் நம் காந்தி அண்ணல்.

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# நீயின்றி நானில்லை

நீயின்றி நானில்லை
ஒரு போதும் பிரிவுமில்லை
கண்ட நாளை நினைவிலேந்தி
கனவுகளை அடுக்கினேன்

ஒரு வழிப்பாதையின்
ஓரங்கள் வனப்பும் வளமும்
சுவாசங்களின் நிறைவும்

மனத்தோட்டம் நிறைந்த மணத்தில்
விடியலை போல் வெளிச்சம்
சிந்திய வண்ணமாய்

நட்பென்று நான் பகிரும்
உணர்வுகளின் எண்ணங்களை
ஏந்திக் கொள்ளும் தோழனே

தோளனைத்து செல்கையில்
விழிமுற்றம் படிக்குதே
உந்தன் உள்ளகிடங்கின்
காதல் மழையின் கவித்துவத்தை
ரசிக்கும் கவிதையும் நானே

நட்பும் காதலும்
மெய்பட்ட நொடிமுதல்
கரைசேரும் அலையின்
சலசலப்பு சாரலும்
உந்தன் மடி தேடும் எந்தன்
மனதின் மணத்தை உணர்ந்த
மன்னவனே மாயவனே
நீயின்றி நானேது



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# மழை

மலரில் விழும் பொழுது
மணமாய் மணக்கிறேன்

இலையில் விழும் பொழுது
குழந்தையாய் தவழ்ந்து செல்கிறேன்

முள்ளில் விழும் பொழுது
வலிகளை சுமக்கிறேன்

மண்ணில் விழும் பொழுது
நிறம் மாறுகிறேன்

கடலில் விழும் பொழுது
சுவையோடு சுவையாய் கலக்கிறேன்

வேறுபாடு ஒன்றும் அறியா
வினோத பிறவினான்

மனிதனாய் பிறக்காமல்
மழையாய் பிறந்ததில் பெரு
மகிழ்ச்சி அடைகிறேன்



கவிஞர் த. சித்ரா, திருச்சி

# தொடு / தொடாதே

கல்வி என்னும் ஆயுதத்தால்
அனைவரின்
கண்களும் திறந்திடும் நூலைத் தொடு

மது என்னும் அரக்கனால்
மனிதனும் மிருகமாவாய் தொடாதே



புன்னகை என்னும் அருமருந்தால்
பூப்போல அனைவர் மனதையும் தொடு

புகை என்னும் பூகம்பத்தால்
புன்சிரிப்பு மறைந்து உடல்நலன் கெடும் தொடாதே

போகிற போக்கில் உதவி புரிந்து
போலிகளை அழித்து நன்மையைத் தொடு

போதை என்னும் பழக்கத்தால்
பேதையவளையும் மறக்க வைத்திடும் தொடாதே

உடல் நலனுக்கு ஏற்பான பொருட்களைத் தொடு
உடல் நலத்திற்கு தீங்கான பொருட்களைத் தொடாதே

பிறருக்கு மனமுவந்து உதவி அனைவரின் நன்மதிப்பைத் தொடு
தொடாதே பிறர் பொருள் என்பதனை அறிந்தால் களவாடாதே

தொடவும் தொடாமலும் இருந்திட நிறைய விடயங்கள் இருக்குதிங்கே
அதை உணர்ந்து சிறப்பாய் செயல்பட்டால் நன்மையும் நடக்குமிங்கே

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நேர்மை

நேர்மையாக இருந்தால்
நேசங்கள் எல்லாம் சற்றுத் தூரமாகும்.

உடனிருப்பவர்கள் கூட உள்ளம்
புரியாமல் தள்ளிச் செல்வர்.



நேர்மையின் பாதை மிகக் கடினம்
குறுக்குவழி சேருமிடம் மிகக் கடினம்.

நேர்மை உறங்கும் போது
பொய்மை விழித்துக் கொள்கிறது.

உண்மை உலகை ஆள வெகுநாளாகும்
பொறுமை உன்னை எடை போடும்.

பொய்யான உறவுகளோடு வாழ்வதைவிட
நேர்மையோடு தனித்திருத்தல் உயர்வு.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ், கம்பளை

# எல்லை தாண்டாதீர்கள்

என்னதான்
செய்ய நாங்கள்?
முக்கி,முனகி,
திட்டி,திரட்டி.
ஒன்றும் உதவவில்லை.
உங்களுக்கு வேடிக்கை;
எங்களுக்கு வாடிக்கை.
உங்களுக்கு உணவு ;
எங்களுக்கு வாழ்க்கை.
இனி...
சாட்சிக்காரர்களும் வேண்டாம்;
சண்டைக்காரர்களும் வேண்டாம்.
உங்கள் கால்களில் விழுகிறோம்,
மீன்களே
தயவு செய்து
எல்லை தாண்டாதீர்கள்!



கவிஞர் ராஜு ஆரோக்கியசாமி, பிக்சாண்டார் கோவில்

கலக்கத்தில் ஆழ்மனம்
அண்ணாந்து பார்க்கிறேன்
மின்னும் நட்சத்திரம்!



கவிஞர் லா. பெனிஷ், திசையன்விளை

## 51 ஆண்டாள் 21

### நாச்சியார் ஆறாம் திருமொழி வாரணமாயிரம் 7முதல் 11

ஏழாவது பாசுரத்தில் கற்றுத்தேர் வைதிகர்கள்
வேதவாக்கு உச்சரிக்க மந்திரங்கள் ஓதிட்டே
எம்பெருமான் கண்ணனவன் கோதைதன் கரம்பற்றி
தீதனைவலம் வருவதனை கனவினிலே கண்டதாக
தோழிக்கே உரைக்கின்றாள்! எட்டாவது பாசுரத்தே
இப்பிறவி மற்றுள்ள பிறவிகட்கும் புகலிடமாய்
இருக்கின்ற எம்பெருமான்! தலைவனவன்! கல்யாண
குணமுடையான்! பூர்ணமானோன்! அடியார்களின் கால்பிடிக்கும்
சிறப்புற்றோன்! கோதைதன் கால்பிடித்தே அம்மிமிதி
சடங்கதனை கனவினிலே கண்டதாக சாற்றுகின்றாள்!
ஒன்பதாவது பாசுரத்தே கோதைதன் அண்ணன்மார்
தீவளர்த்தே கோதைதனை முன்நிருத்தி அச்சுதன்தன்
திருக்கைமேல் கோதைதன் கைவைத்து பொரிமுகந்து
இட்டதனை தன்கனவில் கண்டதாக தோழிக்கே
சாற்றுகிறாள்! பத்தாவது பாசுரத்தே கோதைதன்
மெய்யெல்லாம் குங்குமத்தின் பூச்சோடு குளிர்சந்தனம்
தடவிட்டே ஆனைமேல் எம்பெருமான் தன்னோடே
கோதைதன் ஊர்வலத்தில் மணநீரால் இருவரையும்
மஞ்சனமே பூணுவதை கனவினிலே பார்த்ததாக
தோழிக்கே சொல்லிமகிழ் கொள்வாளே! பதினொன்றாம்
பாசுரத்தே பதிகத்தின் பயனாக நல்லகுணம்
மிக்கிட்ட உயர்மக்கள் கோதைபோல் வாய்த்திடுவர்!
மாமகிழ்வு கொண்டிடுவர்! என்றவார்த்தை விளம்பினளே!
ஆறாவது பதிகமது முழுமைபெற பாச்சுவையில்
அமிழ்தமுற்று தமிழினிமை கொண்டோமே! கண்ணனொடு
கோதைதன் மாக்காதல் நன்மகிழ்வே! ஏழாவது
திருமொழியாம் கற்பூரம் நாறுமோயெனும் ஈகை
ஈரைந்து பாசுரத்தை படித்திட்டும் பாடிட்டும்
கற்றுணர்ந்து கோதைதமிழ் மாந்திட்டே மகிழ்வோமே!
பாமாலை நாமணக்கும் காதூணே!அமுதமதே!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# வெறும் காகிதத்தை வாசிக்கலாம்

வேஷம் கலைக்க மனமில்லை
வேண்டியது எதுவும் எனக்கில்லை
விட்டு விலகிபறக்கத்தான் ஆசை
விளையாட்டில்கூட தோற்கவே ஆசை

சவப்பெட்டியில் ஊர்வலம் போகையிலே
வெறும் கையை விரித்துகாட்ட ஆசை
சபைகள் பல பார்த்தாச்சு
அதிகார ஆணவங்கள் மரிச்சாச்சு



உயிரற்ற உடல் தூரம் பல பயணமாச்சு
புதைக்க இடம் தேடி அலைஞ்சாச்சு
பூர்வீகம் யாவும் மறந்தாச்சு
பூஜிக்க யாருமில்லை தெரிஞ்சாச்சு

இனி வேடிக்கை ஏதுமில்லை
கட்டுவதற்கு வேஷம் இனியுமில்லை
கசப்பு இனிப்பு பாகுபாடில்லை
கடவுளைக் காண ஆவல்இல்லை

தனியே இருக்கவே விழைகிறேன்
சிரிப்பை தவிர்க்கவே போராடுகிறேன்
கண்ணீரும் ஏனோ அந்நியமாச்சு
காதோரம் இரகசியம் அற்றுபோயாச்சு

கல்லறையில் மீண்டும் சந்திக்கலாம்
கடன் ஏதாவது இருந்தால் தீர்க்கலாம்
வெறும் காகிதத்தை வாசிக்கலாம்
வேஷத்தை இனி கலைத்துவிடலாம்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு திருச்சி

# உன்னை உணருகிறேன்

அங்கே இருக்கின்ற நீ
எங்கும் இருப்பாயா
என்று தெரியவில்லை.
இப்போது
என்னுடன் இருக்கின்றாய்
என்பதை மட்டும்
நான் உணர்கிறேன்.



கவிஞர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# தற்பெருமை தவிர்த்திடுவோம்

பணபலம், பதவி, இவற்றின் துணையுடனே
தன்னை யாரென்று காட்ட வேண்டுமெனும்
எண்ணம் கொண்டவர்கள் தற்பெருமை பேசிடுவர்!
"வியவற்க என்ஞான்றும் தன்னை" என்றுரைப்பார்
தெய்வப் புலவர் திருவள்ளுவரும்! ஒருவரின்
பெருமையைப் பிறர் பேச வேண்டும்! தனது
பெருமையைத் தானே பேசுதல் இன்பமன்று!
மாறாக செருக்கினை வளர்த்து விடும்!
வீரத்தில், கல்வியிற், கொடைத்திறனில் சிறந்தோரை
போற்றிப் பாடுதல் புலவர்களின் இயல்பு!
தன்னைப் புகழ் வந்தடையும் என்றெண்ணி
தான தருமம் செய்வோரை "அறவிலை
வணிகர்கள்" என்றழைப்பர் எள்ளலுடன் புலவர்கள்!
பெருமை உடையவர்கள் செருக்கின்றி வாழ்ந்திடுவர்!
சிறுமை உடையவர்கள் தற்பெருமை பேசியே
செருக்குடன் வாழ்ந்திடுவர்! இலக்கியங்கள்
ஒருவரது வீரத்தைப் பிறர் புகழ்வதே
மரபென்று உணர்த்தும் வகை அமைந்துளதே!
தன்னையே வியந்து பாராட்டு பவர்களெலாம்
விரைந்து கெடுவார்கள் என்றுரைத்தார் வள்ளுவரும்!
கையறு நிலையில் ,கழிவிரக்கம் கொண்டு
தற்பெருமை பேசுவது உலக இயற்கையென
சாற்றிடும் சான்றோர் உலகம் விதிவிலக்காய்!
சிலப்பதிகாரத்தில், செல்வந்தன் கோவலன் தான்பெற்ற
செல்வமெலாம் இழந்த பின்னர் கண்ணகியிடம்
முன்னம் தான்பெற்றிருந்த குன்றுநிகர் செல்வத்தின்
பெருமைதனைக் கூறுகிறான்! விதிவிலக்கை விலக்கிடுவோம்!
தற்பெருமை பேசுதலை தவறென்றே கருதிடுவோம்!
நற்செயலாற்றி நம்மைப் பிறர்புகழ வாழ்வோமே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# புத்தன்

ஏன் உன்னை புத்தன்
என்கிறார்கள் என்று
புத்தனிடம் கேட்டது மந்தி.

எல்லாவற்றையும் துறந்ததால்
என்று சொன்னார் புத்தர்

ஏன் எல்லாவற்றையும்
அடைய வேண்டும்

பிறகு ஏன் எல்லாவற்றையும்
துறக்க வேண்டும்


பதில் சொல்லத் தெரியாமல்
விழித்தார் புத்தர்



கவிஞர் அ. ஈடித் ரேனா

மழையைப் பதிவிறக்கம் செய்யும் வானம்
வளத்தைப் பதிவேற்றம் செய்யும் வனம்
கால காலமாய்த் துரத்திய பகைநீங்கி
கலப்புத் திருமணம் முடிக்கும்
மீசைக்காரப்புலியும் மணப்பெண்மானும்

மாசிமாத களத்துமேட்டில்
புதியபழைய காதல் பாடல்களின் கலவைக்கு
கூட்டு நடனமாடும் கீரிப்பாம்பு தோழர்கள்
படவரியில் காணொளியைப்
பதிவு செய்த நிமிடத்தில்
மருதம் முழுவதும் பிரபலம்



முக்கால்முக நிலவு
மேகத்தை இழுத்துமூடி உறங்கும் நேரம்
முதலிரவை ஆரம்பிக்கும் வெட்டிக்கிளியிணை
கலவியில் கரைந்த இரவு
உயிர்பயத்தோடு விழிக்கும் தலைவனுக்கு
நீண்டாயுள் வேண்டும் வெ(வீ)ட்டுக்கிளித்தலைவி
பல்லாயிரம் முறை
கண்ணைக் கசக்கிக் கசக்கிப்பார்த்து
நனவென்று உறுதிப்படுத்திக்கொள்ளும் பகலவன்

உறுதியற்ற அடுத்த கணத்திற்காக
பொருள் புகழை வாரிக்கொள்ளும் வாழ்க்கையோட்டத்தில்
மனிதனை வேட்டையாடும் மனிதன்.

கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல்

## நாடகம் காட்சி-5

இடம்-தேவாலய வளாகம்

பாத்திரங்கள்: எழிலரசி, சகாய நாதன், மெர்லின், சில்வியா

**எழிலரசி** : என்ன மெர்லின் சபை திருவிழா ஏற்பாடுகளெல்லாம் நன்றாக நடக்கிறதா?

**மெர்லின்** : இந்த வருடம் வேண்டாமென்று முடிவெடுத்து விட்டோம்

**எழிலரசி** : ஏன்? என்னாச்சு? சுறுசுறுப்பாக எல்லா ஏற்பாடுகளையும் தடபுடலாக செய்து கொண்டிருந்தீர்களே....

**சில்வியா** : அது... வந்து.தேன்மலரின் கணவர் தவறிவிட்டார்.

**சகாய நாதன்** : என்னது குமார் இறந்து விட்டாரா. அவர் உடல்நலம் தேறி வருவதாகத் தானே சொன்னீர்கள்

**மெர்லின்:** நன்றாக தெம்பாக வீடு திரும்பியவர் டாக்டர் சொல்லியனுப்பிய பின்பும் குடிக்காமல் இருக்க முடியாது என்று குடிக்க ஆரம்பித்தார். பாவம் தேன்மலர் குடும்பம் இப்போது தெருவில் நிற்கிறது.

**எழிலரசி** : சே......குமாருக்கு இப்படி ஒரு முடிவு வந்திருக்க வேண்டாம். தேன்மலர் தான் பாவம் சகாயநாதனும் நானும் அவங்களைப் போய் பார்த்து விசாரித்து வர வேண்டும்.

**எமல்டா** : வேகமாக ஓடி வர

**எழிலரசி** : எமல்டா... என்ன ஆயிற்று ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்.

**எமல்டா** : அவருக்கு மிகவும் சீரியஸாகி விட்டது. டாக்டர் கையை விரித்து விட்டார். இனி எல்லாம் அவன் கையில் தான் இருக்கிறது என்று மேலே பார்த்து கையை காட்டி விட்டார் எனக்கு பயமாக இருக்கிறது. அதனால் தான் தேவனிடம் ஜெபித்து மனமுருகி என் ரோட்ரிக்ஸை எனக்கு திரும்ப தர கேட்க வந்தேன்.

**மெர்லின்** : கவலைப்படாதீர்கள்.வாருங்கள் எல்லோரும் போய் சேர்ந்து ஜெபிப்போம்.கடவுள் எமல்டாவை கைவிட மாட்டார்.


**எழிலரசி** : (சகாய நாதனிடம்) நாமும் போய் ஜெபிக்கலாம். ரோட்ரிக்ஸ் உடல் நலம் தேறி கண்டிப்பாக எமல்டாவிடம் திரும்பி வர கடவுள் வரங்களைப் பொழிவார்.

தொடரும் ...

கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல்

# ஆகாயத்துக்கு அடுத்த வீடு

**மு.மேத்தா (சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல்)**
**கவிதா வெளியீடு ; முதல் பதிப்பு ஆகஸ்ட் 2004 ; பக்கம் 96**
**விலை ரூ 100**




கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், அவர்கள் வருகிறார்கள், காத்திருந்த காற்று என பல கவிதைத் தொகுப்புகளையும் சிறுகதை நாவல் கட்டுரைத் தொகுப்புகளையும் வெளியிட்டு இருக்கும் மு மேத்தா அவர்களின் கவிதைத் தொகுப்பு இது. எண்பதுகளில் தமிழகத்தின் இளைஞர்களை கவிதைகளால் ஆட்டி வைத்த சிந்தனைக்குச் சொந்தக்காரர் மு மேத்தா அவர்கள். இவரது கவிதைகள் பல கல்லூரிகளில் மேடையேற்றப்பட்டுள்ளன.

பல இளைய தலைமுறை எழுச்சிக்கும் இவரது கவிதைகள் வழிகாட்டியாக அமைந்துள்ளன. சாகித்ய அகாடமி விருது பெற்ற இந்த கவிதைத் தொகுப்பில் பல தலைப்புகளில் அடங்கியுள்ள நெடுங் கவிதைகள் அணி வகிக்கின்றன.

இயல்பாகவே கவிஞருக்குள் எழும் சமூகத்தின் மீதான கோபம் நியாயத்தின் பக்கம் நிற்கும் கருணை தவறுகளை தட்டிக் கேட்கும் பொறுப்புணர்வு போன்று பல்வேறு தளங்களில் எழுதப்பட்டிருக்கும் கவிதைகள் நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

நெடுங்கவிதைகளின் வழியே நம் நெஞ்சத்தில் பல்வேறு சிந்தனைகளை விதைக்கும் கவிஞரின் வரிகள் மூன்று வரிகளுக்குள்ளும் அமைந்து நம்மை சட்டென்று விழிப்படையவும் வைக்கின்றன. ஜனநாயகத்தின் மீதான இந்திய மக்களின் நம்பிக்கை இந்திய நாட்டின் இறையாண்மையையும் கட்டமைப்பையும் எண்ணிப் பெருமைப்படும் மனிதர்களின் மனநிலை இவற்றை வெளிப்படுத்தும் இக்கவிதை தொகுப்பில் காதலும் இடம்பெற்றிருக்கிறது

**திரு இளையவன் சிவா**

## இந்தியா என் காதலி

மக்கள் தொகையில்
நூறு கோடியைத்
தாண்டி விட்டாய்
ஒரே ஒரு
வறுமைக் கோட்டைத்
தாண்ட முடியாமல்
வழுக்கி விழுகிறாய்,

மதங்களுக்கும்
சாதிகளுக்கும்
மகுடம் சூட்டிவிட்டு
மனிதர்கள் கிடக்கிறார்கள்
மருத்துவமனைகளின்
சவக்கிடங்குகளில்.

ராம ராஜ்ஜியக்
கனவுகள்
மெல்ல மெல்ல
ரோம ராஜ்ஜியக்
கனவுகளாய்
மாறி வருகின்றன.

உண்மையை நான்
ஒப்புக்கொள்கிறேன்
காதலித்து உன்னை
கட்டிக் கொள்ளவில்லை
கட்டிக் கொண்டதால் தான்
காதலித்துக்
கொண்டிருக்கிறேன்.

கற்றவன் என்ற
கர்வம் தகர்த்தது
அந்த விவசாயி
கன்னடத்தில் எழுதப்பட்ட
கடிதத்தைக் கொடுத்து
வாசித்துக் காட்டச் சொல்லி
வணங்கிய போது.

வசதி படைத்தவர்களின்
வீடுகளில் உள்ள
நீச்சல் குளங்களைப்
பார்க்கும் போதெல்லாம்
வரும் எனக்குச் சந்தேகம்
இந்தக்
குளங்களை எங்கு போய்க் குளிப்பாட்டுவது?

வழுவமைதி

வசதி உள்ளவர்
வழுக்கி விழுந்தால்
குளியலறை
என்று கூறுக
பஞ்சை பராரிகள்
வழுக்கி விழுந்தால்
படுக்கையறை என்று
பகர்க.

திரு இளையவன் சிவா

## புறமே அகம்

கோபித்துக் கொள்ளாதே கோப்பெருஞ்சோழனே
புறப்புண் நாணி
வடக்கிருப்பதென்றால்
ஒவ்வொரு நாளும்
எத்தனை முறை
வடக்கிருப்பது?
மொத்தமாய் எல்லோரும்
முதுகில் குத்தும் ஊரில்.

## ஒரே குரல்

உங்களில் யாராவது
ஒரு மனிதன் இருந்தால்
வரச் சொல்லுங்கள்
ஒன்றாக நாங்கள்
உயிர்த்தெழுகிறோம்.

## விழாக் காலம்

கவிஞன் மரித்த பின்
உயிர்த்தெழுந்தன
கவிதைகள்.

ஆதிவாசியைப் போன்றது
என் இதயம்
அடித்துச் சொல்லும்
அடிபட்டதைச் சொல்லாது

## சுவரொட்டித் தலைவர்கள்

சுவரொட்டித் தலைவர்களை
நாங்கள்
சகிப்பதன் காரணம்
ஒட்டுவோர் எழுதுவோர்
ஒரு சிலர் பிழைக்கிறார்

## மதிப்பீடு

எழுதிக் கொண்டிருந்தான்
விமர்சனங்கள் வந்தன
எழுதாமல் இருந்தான்
விருதுகள் வந்தன
கால்நடைக்குத்
தெரியுமா
கவிதை நடை?

## பிறவிக் கடல்(ன்)

இறைவன் தான் என்னைக் கேட்டான்
எப்படி வாழ்ந்தாய் என்று.
இறைவனை நானும் கேட்டேன்
எப்போது வாழ்ந்தேன் என்று!

திரு இளையவன் சிவா

இந்தியா விவசாயம் காதலியுடனான ஊடலும் கூடலும் இயற்கை மீதான கரிசனம் நதியின் வரலாறு சமத்துவ சமதர்மம் இனப்பிரச்சனைகளின் மீதான தீராத கோபம் கடல் மீதான பேரார்வம் என பல திசைகளின் வழியே பயணிக்கும் இவரது கவிதைகள் அன்பையும் கருணையையும் மனதிற்குள் விதைப்பதில் முன்நிற்கின்றன.

இனம் மதம் பாலினம் சார்ந்த எந்த சச்சரவுகளும் அன்பை நிறைத்திருக்கும் மனிதர்களுக்குள் எழுவதில்லை.அவர்கள் தம்மைப் போலவே தேசத்தையும் இயற்கையையும் நேசிப்பவர்கள். அத்தகு மனங்களை இந்நூலின் வரிகள் வெளிச்சமிடுகின்றன.

திரு இளையவன் சிவா

# எல்லாம் நீரே அப்பா!

## நூல் அனுபவம் (இயேசு கவிதைகள்)

"கவிமாமணி" இரஜகை நிலவன்,
இந்த நூலைத் தேடிய அன்பு வாசகருக்கு
என் கனவுகளைத் தேடிய நேசத்திற்கு

இயேசுவை எப்படி சுவைக்க வேண்டுமென்றும்
அவரை நோக்கி எவ்வாறு செபிக்க வேண்டுமென்றும்
மரியன்னைக்கு கொஞ்சம் புகழாரம் சூட்டுவதற்காகவும்
தெரிந்த முறையில்
எழுதப்பட்டவைதான் இக்கவிதைகள்.

இந்த கவிதைத் தொகுப்பிலுள்ள கவிதைகள் அனைத்துமே
தாபோர் வாய்ஸ் இதழில் வெளிவந்தவை தான்.




கவிஞன் திரு வசந்த நிலா

கட்டுரை

## பிறப்பு, இளமை:

புதுக்கோட்டை மாவட்டம், இராயவரம் சிற்றூரில் 07 நவம்பர் 1922 அன்று பிறந்தார். பெற்றோர் அழகப்ப செட்டியார் — உமையாள் ஆச்சி. உள்ளூரில் சு.கதி. காந்தி ஆரம்பப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரையில் பயின்றார். பிறகு ராமச்சந்திரபுரத்திலுள்ள ஸ்ரீ பூமீஸ்வரசுவாமி உயர்நிலைப் பள்ளியில் 11-வது வகுப்பு வரையில் படித்தார். பின்னர் தமிழ்ப்பேராசிரியர்களான மதுரை முதலியார், இளவழகனார், மா.இராசமாணிக்கனார் ஆகியோரிடம் தமிழ் கற்றார்.

## தனி வாழ்க்கை:

1940-ம் ஆண்டில் வை. கோவிந்தன் சென்னை சக்தி பத்திரிகை அலுவலகத்தில் காசாளராகச் சேர்ந்தார். "ஆளுக்குப் பாதி" என்னும் தம் முதல் கதையை எழுதினார்.



1941-ல் சக்தி பத்திரிகையில் இருந்து விலகி இந்தியன் வங்கியில் சேர்ந்தார். நவம்பர் 1982-ல் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரை கவிதையும் கட்டுரையும் எழுதினார். ஓய்வுக்குப் பின்பும் எழுதிக் கொண்டுதான் இருந்தார்.

பிப்ரவரி 4, 1942 அன்று வள்ளியம்மை ஆச்சியைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு அழகப்பன் எனும் மகனும், அலமேலு, கஸ்தூரி, உமையாள், தேவி என நான்கு மகள்களும் பிறந்தனர்.

திரு அ வில்சன்,இதழாசிரியர்

கட்டுரை

### இலக்கியவாழ்க்கை

அழ. வள்ளியப்பா தன் 13-ஆவது வயது முதல் கவிதை எழுதத் தொடங்கினார். இதழாசிரியராக தனது இலக்கிய வாழ்வை தொடங்கினார். பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய இதழ்களுக்கு கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார். 1951 முதல் 1954 வரை பூஞ்சோலை என்ற இதழுக்கும், ஓய்வு பெற்ற பின் 1983 முதல் 1987 வரை, கல்கி வெளியீடான கோகுலம் என்ற இதழிலும் ஆசிரியராக இருந்தார். இந்தியன் வங்கியில் பணியாற்றும்போதே ஃபோர்டு ஃபவுண்டேஷன் நிதியுதவியுடன் நடத்தப்பட்ட தென்மொழிகளின் புத்தக டிரஸ்டின் குழந்தைநூல்களின் ஆசிரியராக 1957 முதல் 1962 வரை பணியாற்றினார்.

அழ.வள்ளியப்பாவின் 23 பாடல்கள் கொண்ட முதல் கவிதைத் தொகுதி மலரும் உள்ளம் 1944-ம் ஆண்டு வெளிவந்தது. அழ வள்ளியப்பா 1959,1961,1963,1972,1977,1979 ஆண்டுகளில் சென்னையில் குழந்தை எழுத்தாளர் மாநாடுகளை நடத்தினார். 1981-ல் காரைக்குடியிலும் 1987-ல் கோவையிலும் இந்த மாநாடுகள் நடந்தன.



அழ.வள்ளியப்பா தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் 1956 முதல் 1959 வரை பொதுச் செயலாளர், 1959 முதல் 1960 வரை துணைத் தலைவர் ,1961-ல் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் , 1966-ம் ஆண்டில் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தார். 'தமிழ் எழுத்தாளர் யார் - எவர்' என்ற விவரத் தொகுப்பு நூலைத் தயாரித்து வெளியிட்டார்.

திரு அ வில்சன்,இதழாசிரியர்

## கட்டுரை

### விருதுகள்

1963-ம் ஆண்டில் லக்னோவில் நடைபெற்ற அகில இந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில் பதக்கமும் பாராட்டிதழும் வழங்கப்பட்டன.
குழந்தைகள் இலக்கிய முன்னோடி, பிள்ளைக் கவியரசு, மழலைக் கவிச் செம்மல் என்று சில அமைப்புகள் பாராட்டி போற்றியுள்ளனர்.
1982-ல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தினால் "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்று விருதளிக்கப்பட்டு பாராட்டப்பட்டார்.
1982-ம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்விக்குழுவில் வாழ்நாள் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.
நவம்பர் 22, 1970 அன்று "குழந்தைக்கவிஞர் இலக்கியப்பணி" வெள்ளிவிழா சென்னையில் நடைபெற்றது.
பூவண்ணன் தலைமையில் இயங்கிய பாலர் பண்பாட்டுக்கழகம் 1980-ம் ஆண்டில் 'வள்ளியப்பா வானொலி-தொலைக்காட்சிச் சிறுவர் சங்கம்' என்னும் பிரிவைத் தொடங்கியது.
'பிள்ளைக்கவியரசு' என்னும் பட்டத்தை சென்னை பாரதி இளைஞர் சங்கம் வழங்கியது.
'மழலைக்கவிச்செம்மல்' என்னும் பட்டத்தை காரைக்குடி சர்வதேசக் குழந்தைகள் ஆண்டுவிழாக்குழு வழங்கியது.

### நூல்கள்

அழ. வள்ளியப்பா 11 பாடல் தொகுதிகள், 12 புதினங்கள், 9 கட்டுரை நூல்கள், 1 நாடகம், 1 ஆய்வு நூல், 2 மொழிபெயர்ப்பு நூல்கள், 1 தொகுப்பு நூல் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார்.



திரு அ வில்சன்,இதழாசிரியர்

# அழ.வள்ளியப்பா

## கட்டுரை

**நூல்கள்**

❧ அம்மாவும் அத்தையும், இனிக்கும் பாடல்கள் (பாடல்); இ.பதி. செப்டம்பர் 1991;
❧ ஈசாப் கதைப் பாடல்கள் - முதல் தொகுதி & இரண்டாம் தொகுதி(பாடல்) & முழுயான தொகுப்பு -
❧ எங்கள் கதையைக் கேளுங்கள் (விலங்கியற் கட்டுரைகள்);
❧ எங்கள் பாட்டி, கதை சொன்னவர் கதை - நூல் 1, 2, 3 (வரலாறு); ❧ குதிரைச் சவாரி (நெடுங்கதை);
❧ குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள் முதல் & இரண்டாம் தொகுதி (பாடல்): ❧ குழந்தைக் கவிஞரின் வேடிக்கைப் பாடல்கள்; ❧ 1962 குழந்தைக்குரல் (பாடல்), புதுக்கோட்டை; பாடல்கள் ❧ கேள்வி நேரம்,
❧ சிட்டுக் குருவி (பாடல்); ❧ சிரிக்கும் பூக்கள் (பாடல்);
❧ சின்னஞ்சிறு பாடல்கள் (பாடல்);
❧ சின்னஞ்சிறு வயதில் (வரலாறு), தமிழ்நாடு அரசினர் பரிசுபெற்றது ❧ சுதந்திரம் பிறந்த கதை (வரலாறு)
❧ சோனாவின் பயணம் (கதை)❧ திரும்பி வந்த மான் குட்டி (கதை) ❧ நமது நதிகள்: தென்னாட்டு ஆறுகள் (புவியியல்),
❧ நல்ல நண்பர்கள் (கதை); ,தமிழ்நாடு அரசின் பரிசுபெற்றது
❧ நான்கு நண்பர்கள்: பஞ்சதந்திரக் கதைகள் (கதை);
❧ நீலா மாலா (கதை); நேரு தந்த பொம்மை (பாடல்கள்);
❧ நேருவும் குழந்தைகளும் (வாழ்க்கை வரலாறு);
❧ பர்மா ரமணி (கதை); ,பாப்பாவுக்குப் பாட்டு (பாடல் தொகுதி); தமிழ்நாடு அரசின் பரிசுபெற்றது
❧ பாட்டிலே காந்தி கதை (பாடல் வரலாறு); இந்திய ஒன்றிய அரசின் பரிசு பெற்றது
❧ பாட்டுப் பாடுவோம் (பாடல்); ❧ பாடிப் பணிவோம் (பாடல்); ❧ பாலர் பாடல் (பாடல்);

- பிள்ளைப் பருவத்திலே! (வரலாறு); தமிழ்நாடு அரசின் பரிசுபெற்றது
- பெரியோர் வாழ்விலே முதல் & இரண்டாம் தொகுதி (வரலாறு); தமிழ்நாடு அரசின் பரிசுபெற்றது
- மணிக்கு மணி ஃ மலரும் உள்ளம் முதல் & இரண்டாம் தொகுதி (பாடல்) ஃ மல்லிகை (பாடல்)
- மிருகங்களுடன் மூன்று மணி ஃ மூன்று பரிசுகள்
- ரோகந்தாவும் நந்திரியாவும் , ஃ ரோஜாச் செடி (கதை);
- வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்,
- வாழ்க்கை விநோதம் ஃ விடுகதை விளையாட்டு
- வித்தைப் பாம்பு (மொழிபெயர்ப்புக் கதை)
- வெளிநாட்டு விடுகதைகள் ஃ வேட்டை நாய்

**தொகுத்த நூல்கள்**

- கேள்வி நேரம்: பெரியோரின் கேள்விகளும் பிள்ளைகளின் பதில்களும்;

**பதிப்பித்த நூல்கள்**

- நிமிஷக் கதைகள்
- பாலர் கதைகள் (3-ம் பதிப்பு)

**மொழிபெயர்த்த நூல்கள்**

- ரோகந்தாவும் நந்திரியாவும் (கதை);
- எக்காலத்துக்கும் ஏற்ற கதைகள் (கதைகள்);

அழ. வள்ளியப்பாவின் நூல்களை 2009-ல் தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியது.

**வாழ்க்கை வரலாறு**

அழ. வள்ளியப்பாவின் வாழ்க்கை வரலாற்றை அவரது மணிவிழா ஆண்டில் "குழந்தைக்கவிஞர் வள்ளியப்பா (வாழ்க்கை வரலாறு) என்னும் நூலை முனைவர் பூவண்ணன் எழுதினார். அதனை நவம்பர் 1982-ல் வானதி பதிப்பகம் வெளியிட்டது.

திரு அ வில்சன்,இதழாசிரியர்

# நாளை நமதே

தோல்வியிடம்

வழி கேட்டு தான்

வந்து சேர முடியும்

வெற்றியின் வாசற்படிக்கு

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com